ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

SAGARMALA
PORT-LED PROSPERITY

**Press Release**

Press Release :4 Date: 14.06.2021

**V.O. Chidambaranar Port witnesses remarkable surge in handling of Windmill blades.**

V.O. Chidambaranar Port handled a single export consignment of 24 windmill blades of length 77.50 metres, the longest of its kind handled through VOC Port. The Vessel ‘M.V. PAC Alcor’, with Length overall (LOA) of 199.9 metres, was berthed at the Port on 10.06.2021 and the loading of the 77.50 metre long wind blades were carried out diligently, using Ship’s Hydraulic cranes and Harbour Mobile Cranes of the Port. The Windmill blades were safely transported by M/s. NTC Logistics India Private Ltd., using specialized wind blade and tower transportation flat bed trucks all the way from Sriperumbudur to Tuticorin. The long wind blades were stacked three high, conforming to the safety standards and the vessel sailed from the Port on 13th June, 2021 for the Port of Aransas, USA.

The Shipper, M/s. Nordex India Private Limited, the vessel agent, M/s. B.S.V Shipping Agencies, and the Stevedore, M/s. Century Star, appreciated VOC Port’s capability and efficiency in handling such over dimensional Cargo and assured their committed and continuous support for further shipments.

It is note worthy that, on 9th June, the Port had handled 84 Windmill blades of length 74.90 metres in a single consignment. The Vestas Windmill blade manufacturer in India, M/s. TPA Industries, Chennai, shipped the above consignment through VOC Port, for which M/s. DSV Air & Sea Pvt Ltd., were the handling agents.

V.O. Chidambaranar Port is witnessing a notable surge in wind power components hitting its docks by handling 423 Windmill blades & frames during this Financial year upto 14th June, 2021. During the last financial year, the Port had handled 4462 Windmill blades & towers.

In a message conveyed by Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, he stated that ‘I congratulate the Port officials, Agents, Transporters and exporters for their continued patronage in making VOC Port, the preferred Gateway for Export of Windmill blades and Towers’. He also stated that ‘off late, the size of a windmill rotor blades is getting longer and utmost care is being taken for the shipment of Windmill components’.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Trust today.

PUBLIC RELATIONS OFFICER

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office
ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port
SAGARMALA
PORT-LED PROSPERITY

பத்திரிக்கை செய்தி: 4 நாள்:14.06.2021

**வ.உ.சிதம்பரனார் துறைமுகம் காற்றாலை இறகுகளை (windmill blade) கையாளுவதில் தொடர்ந்து வளர்ச்சி**

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் ஒரே ஏற்றுமதியில் 77.50 மீட்டர் அதிக நீளம் கொண்ட 24 மிகப்பெரிய காற்றாலை இறகுகளை (windmill blade) கையாண்டு புதிய சாதனை படைத்துள்ளது. 199.9 மீட்டர் நீளம் உடைய ‘எம்.வி. பேக் அல்கோர்’ (M.V. PAC Alcor) என்ற இக்கப்பல் 10.06.2021 அன்று வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை வந்தடைந்தது. இக்கப்பலின் ஹைட்ராலிக் பளுத்தூக்கி இயந்திரங்கள் மற்றும் துறைமுகத்தின் நகரும் பளுத்தூக்கி இயந்திரங்கள் மூலம் 77.50 மீட்டர் நீளம் உடைய 24 காற்றாலை இறகுகளும் பாதுகாப்பான முறையில் கையாளப்பட்டது. இக்கப்பலின் சரக்குகள் முழுவதும் மூன்று அடுக்குகளாக ஏற்றப்பட்டு, பின்பு வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து 13.06.2021 அன்று அமெரிக்காவிலுள்ள அரன்சாஸ் துறைமுகத்திற்கு புறப்பட்டு சென்றது. இந்த காற்றாலை இறகுகினை ஸ்ரீபெரம்புதூர்யிலிருந்து வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வரை பிரத்தியோக லாரிகள் மூலம் NTC லாஜிஸ்டிக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் எடுத்து வந்தார்கள்.

இக்கப்பலின் ஏற்றுமதியாளர்கள் நார்டிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடேட் (M/s. Nordex India Private Limited) ஆவர். இக்கப்பலின் காற்றாலை இறகுகளின் கப்பல் முகவர்கள் பி.எஸ்.வி சிப்பிங் ஏஜென்ஸி (M/s. B.S.V Shipping Agencies) ஆவர். சென்சூரி ஸ்டார் (M/s. Century Star) சரக்கு கையாளுவோர் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் காற்றாலை இறகுகளை கையாண்ட திறனை பாராட்டி, மேலும் பல்வேறு ஏற்றுமதிக்கான காற்றாலை இறகுகளை வ.உ.சிதம்பரனார் துறைமுக மார்க்கமாக கையாள உள்ளதாக தெரிவித்தார்கள்.

இதற்கு முன்பு 09.06.2021 அன்று ஒரே ஏற்றுமதியில் 74.90 மீட்டர் நீளம் உடைய 84 காற்றாலை இறகுகளை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் கையாண்டுள்ளது குறிப்பிட்டத்தக்கது. இந்த அனைத்து காற்றாலை இறகுகளும் வெஸ்டாஸ் நிறுவனத்தின் இந்திய தயாரிப்பாளரான TPA நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டு டிஎஸ்வி ஏர் மற்றும் சீ பிரைவேட் லிமிடெட் (M/s. DSV Air & Sea Pvt Ltd) நிறுவனத்தின் மூலம் கையாளப்பட்டது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் காற்றாலை இறகு மற்றும் அதன் உதிரிபாகங்கள் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டு வருகிறது. இந்த நிதியாண்டு ஜீன் மாதம் வரை 423 காற்றாலை இறகுகள் மற்றும் கோபுரங்களை கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த நிதியாண்டில் 4462 காற்றாலை இறகுகள் மற்றும் கோபுரங்கள் கையாளப்பட்டன.

திரு தா.கி. ராமசந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள் தனது செய்தி குறிப்பில், ‘வ.உ.சிதம்பரனார் துறைமுகம் காற்றாலை இறகுகளை ஏற்றுமதி செய்வதற்கான முதன்மை நுழைவாயில் துறைமுகமாக திகழ்வதற்கு உறுதுணையாக இருக்கும் துறைமுக அதிகாரிகள், கப்பல்முகவர்கள், தரைவழி தளவாட நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியார்கள் அனைவருக்கும் தனது நன்றியினையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். மேலும் தற்போது காற்றாலை இறகுகள், கோபுரங்கள் மற்றும் அதன் உதிரிபாகங்களின் அளவு தொடர்ந்து அதிகரிப்பதால், இத்தகைய ஏற்றுமதியை மிகவும் கவனுத்துடன் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் செயல்படுத்தி வருகிறது’ என்று கூறினார்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி